செ.வெ.எண். 11 நாள்: 07.04.2019

**கிருஷ்ணகிரி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில், நாடாளுமன்ற தேர்தல் 2019 யொட்டி வாக்கு சாவடியில் பணியாற்றும் வாக்கு சாவடி தலைமை அலுவலர்கள் மற்றும் உதவி அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் எஸ்.பிரபாகர் இ.ஆ.ப. அவர்கள் இன்று ( 07.04.2019 ) நேரில் பார்வையிட்டார்.**

**இன்று நடைபெற்ற இரண்டாம் கட்ட பயிற்சியில் 5, 826 ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.**

கிருஷ்ணகிரி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில், கிருஷ்ணகிரி நாடாளுமன்ற தேர்தல் 2019 யொட்டி வாக்கு சாவடியில் பணியாற்றும் வாக்கு சாவடி தலைமை அலுவலர்கள் மற்றும் வாக்கு சாவடி அலுவலர்களுக்கு நடைபெற்ற இரண்டாம் கட்ட பயிற்சி வகுப்பை **மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் எஸ்.பிரபாகர் இ.ஆ.ப. அவர்கள் இன்று (07.04.2019 ) நேரில் பார்வையிட்டார்.**

நாடாளுமன்ற தேர்தல் 2019 யொட்டி வாக்குசாவடியில் பணிபுரியும் அலுவலர்கள் வாக்கு சாவடியில் கடைபிடிக்க வேண்டிய பணிகளை பயிற்சியின் போதே எந்தவித சந்தேகங்கள் இல்லாத வகையில் தங்களை நல்ல முறையில் தயார் படுத்திக்கொள்ள வேண்டும். குறிப்பாக அலுவலர்கள் செக் லிஸ்ட் வைத்து அதில் குறிப்பிட்டுள்ளவாறு எந்த எந்த பணிகளை முதலில் செய்ய வேண்டும் என படித்து தெரிந்துகொண்டு பணியாற்ற வேண்டும். குறிப்பாக காலை 7- மணிக்குள் மாதிரி வாக்கு பதிவை நடத்தி முடிக்க வேண்டும். மின்னனு வாக்கு பதிவு இயந்திரங்கள் செயல்பாடுகள் குறித்து நன்கு பயிற்சி பெற வேண்டும். சந்தேகம் இருக்கும் பட்சத்தில் தேர்தல் ஆணையத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள கையேட்டை படித்து தெரிந்துக்கொள்ள வேண்டும்.

வாக்கு பதிவு நாள் அன்று வாக்கு பதிவு அலுவலர்கள் வாக்காளர்களின் புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் அடையாள அட்டை உள்ளதா என்பதை சரிபார்த்துக்கொள்ள வேண்டும். பயிற்சியின் போது வாக்கு பதிவு இயந்திரங்களை சந்தேகம் நீங்கும் வரை இயக்கி பார்த்துக்கொள்ள வேண்டும். மண்டல அலுவலரின் பெயர் - செல் பேசி எண் ஆகியவற்றை தெரிந்து வைத்திருக்க வேண்டும். பச்சை தாள் முத்திரை, சிறப்பு அட்டை, மற்றும் முகவரி அட்டை ஆகியவற்றை பயன்படுத்தும் முறை / எங்கெங்கு பயன்படுத்த வேண்டும். சட்ட ஒழுங்கு ஏற்பட்டால் யாருக்கு தகவல்கொடுக்க வேண்டும் என்ற விவரங்களை தெரிந்துக்கொள்ள வேண்டும். எனவே தேர்தல் விதிமுறைகளை கடைபிடித்து அமைதியான முறையில் தேர்தல் நடத்திட அனைத்து அலுவலர்கள் உறுதி கொள்ள வேண்டும். தேர்தல் பணியில் ஈடுபடும் அலுவலர்களுக்கு வாக்கு சாவடிகளில் அடிப்படை வசதிகளான குடிநீர், கழிப்பறை வசதி, மின்சார வசதி நல்லமுறையில் செய்து தரப்படும். என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் எஸ்.பிரபாகர் இ.ஆ.ப. அவர்கள் எடுத்துரைத்தார்.

மேலும் பயிற்சி மையங்களில் வைக்கப்பட்டுள்ள சீல் வைக்கப்பட்ட பெட்டியில் மாலை 3 மணி முதல் 5- மணி வரை ஆசிரியர்கள் மற்றும் தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் தபால் வாக்குகளை செலுத்தலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டார். தொடர்ந்து பயிற்சியில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்கு வழங்கப்படும் உணவுகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கிருஷ்ணகிரி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற பயிற்சியில் வாக்கு சாவடி தலைமை அலுவலர்கள் 726 நபர்களும், உதவி அலுவலர்கள் 562 நபர்கள் என மொத்தம் 1288 அலுவலர்களும்,

பர்கூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற பயிற்சியில் வாக்கு சாவடி தலைமை அலுவலர்கள் 449 நபர்களும், உதவி அலுவலர்கள் 344 நபர்கள் என மொத்தம் 793 அலுவலர்கள்,

ஊத்தங்கரை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற பயிற்சியில் வாக்கு சாவடி தலைமை அலுவலர்கள் 259 நபர்களும், உதவி அலுவலர்கள் 873 நபர்கள் என மொத்தம் 1,132 அலுவலர்கள்,

வேப்பனஹள்ளி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சூளகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற பயிற்சியில் வாக்கு சாவடி தலைமை அலுவலர்கள் 151 அலுவலர்களும், உதவி அலுவலர்கள் நபர்கள் என மொத்தம் 747 பேர்களும்,

ஓசூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற பயிற்சியில் வாக்கு சாவடி தலைமை அலுவலர்கள் 212 நபர்களும், உதவி அலுவலர்கள் 735 நபர்கள் என மொத்தம் 947 பேர்களும்,

தளி சட்டமன்ற தொகுதிகுட்பட்ட தேன்கனிக்கோட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற பயிற்சியில் வாக்கு சாவடி தலைமை அலுவலர்கள் 308 நபர்களும், உதவி அலுவலர்கள் 511 நபர்கள் என மொத்தம் 819 பேர்களும்,

இப்பயிற்சி வகுப்பில் கலந்துக்கொண்டனர். வாக்கு பதிவு அலுவலர்களுக்கு பயிற்சி வகுப்பினை மண்டல அலுவலர்கள் மற்றும் உதவி மண்டல அலுவலர்கள் மேற்கொண்டனர்.

இவ்வாய்வின் போது கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் திரு.சரவணன், மாவட்ட கல்வி அலுவலர் திரு. ராஜா, வட்டாட்சியர்கள் திருமதி.மிருளாழினி, திரு.என். பிரதாப், அரசு பெணகள் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் திரு.மகேந்திரன், மற்றும் ஆசிரியர்கள், துணை வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் கிருஷ்ணகிரி.